## சுருக்கம்

வனம் – தேனி மாவட்டம் - உத்தமபாளையம் வட்டம் – 2, தேவாரம் (பழைய எண்.17) கிராமம் – பொந்துக்குண்டு கரடு வன வட்டாரம் – நில அளவை எண் 179/1–ல் உள்ள 27.22.0 எக்டர் நிலம் – தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 16–ன் கீழ் காப்பு வனமாக அமைத்து அறிவிக்கை செய்தல் - ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.14) துறை**

அரசாணை (நிலை) எண்.18

நாள்: 20.01.2023
சுபகிருது, தை–6
திருவள்ளுவர் ஆண்டு–2054

படிக்க.:

1. அரசாணை (நிலை) எண்.44, சுற்றுச்சூழல் மற்றும் வனத்(வனம்.14) துறை, நாள். 02.03.2012
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை–15. கடித எண்.டிஎஸ்2/45208/2021, நாள். 03.08.2022.

=======

**ஆணை :**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவுடன் பெறப்பட்ட தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், 2, (பழைய எண்.17) தேவாரம் கிராமம், பொந்துக்குண்டு கரடு வன வட்டாரம், நில அளவை எண் 179/1–ல் உள்ள 27.22.0 எக்டர் நிலம் தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882), பிரிவு 16–ன் கீழ் காப்பு வனமாக அமைக்க கோரும் அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதனை தமிழ்நாடு அரசிதழ் நாள்.08.02.2023–ல் ஆங்கிலத்திலும், தேனி மாவட்டம் அரசிதழ் நாள்.22.02.2023–ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

..2.

2. 08.02.2023–ந் தேதிய தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அரசிடமிருந்து அறிவிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதனை தமிழில் தேனி மாவட்ட அரசிதழில் வெளியிடுமாறு மதுரை அரசு கிளை அச்சக மேலாளருக்கு அறிவுறுத்துமாறு அரசு மைய அச்சக பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. மேலும், அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க மைய, கிளை அச்சக பணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை தேனி மாவட்ட ஆட்சியர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கண்காணித்து அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுப்ரியா ஸாஹு

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை - 1. (இணைப்புடன்)
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், மதுரை. (இணைப்புடன்)
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர்,
நில நிர்வாகம், சென்னை – 5 .(இணைப்புடன்)
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்),
சென்னை - 32. (இணைப்புடன்)
மாவட்ட ஆட்சியர், தேனி. (இணைப்புடன்)
வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர்,
திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மதுரை. (இணைப்புடன்)
மாவட்ட வன அலுவலர், தேனி .(இணைப்புடன்)
வன நிர்ணய அலுவலர், போடிநாயக்கனூர். (இணைப்புடன்)

..3.

**நகல்:-**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,
சென்னை -9. (இணைப்புடன்)
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (LD-IV) துறை,
சென்னை -9 (இணைப்புடன்)
சட்டத் (Opinion) துறை, சென்னை -9 (இணைப்புடன்).
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (மொழிபெயர்ப்பு)துறை,
சென்னை -9 (இணைப்புடன்)
இருப்புக்கோப்பு/ உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பி.எஸ்.சாவர்னா
பிரிவு அலுவலர்

**அரசாணை (நிலை) எண்.18,**

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.14) துறை,**

**நாள். 20.01.2023-ன் இணைப்பு**

| வரிசை எண். | பதவி மற்றும் அலுவலக முகவரி | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|
| 1 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை -9. | 2 | 2 |
| 2 | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை-32. | 3 | 3 |
| 3 | மாவட்ட ஆட்சியர், தேனி | 2 | 2 |
| 4 | வனப் பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர், திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மதுரை | 5 | 5 |
| 5 | மாவட்ட வன அலுவலர், தேனி | 12 | 12 |
| 6 | வன நிர்ணய அலுவலர், போடிநாயக்கனூர் | 8 | 8 |

**சுப்ரியா ஸாஹூ**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

//உண்மை நகல்//

பி.எஸ். சிவரா
பிரிவு அலுவலர்

**பிற்சேர்க்கை.**

**அறிவிக்கை.**

தமிழ்நாடு 1882–ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5 / 1882) பிரிவு 16–இன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழே விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாற்புற எல்லைகளுக்குள் அடங்கிய நிலப் பகுதியை 20.07.2023ஆம் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் காப்பு வனமாக இதனால் அறிவிக்கிறார்.

**விவர அட்டவணை.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | : | தேனி |
| 2. | வட்டத்தின் பெயர் | : | உத்தமபாளையம் |
| 3. | கிராமத்தின் எண் மற்றும் பெயர் | : | 2,(பழைய எண்.17) தேவாரம் |
| 4. | வன வட்டாரத்தின் பெயர் | : | பொந்துக்குண்டு கரடுவன வட்டாரம் |
| 5. | நில அளவை எண் | : | 179/1 |
| 6. | வன வட்டாரத்தின் பரப்பு | : | 27.22.0 எக்டர் |

**நாற்புற எல்லைகள்.**

**வடக்கு.–** இவ்வனவட்டாரத்தின் எல்லையானது எண்.2, தேவாரம் கிராம நில அளவை எண்கள் 180, 7 மற்றும் 179/1 ஆகியவை சந்திக்கும் முச்சந்தியில் தொடங்கி எண்.2, தேவாரம் கிராம நில அளவை எண்கள்.7 மற்றும் 8 ஆகியவற்றின் தெற்கு எல்லைகள் வழியே பொதுவாக கிழக்கு நோக்கிச் சென்று எண்.2, தேவாரம் கிராமத்தின் நில அளவை எண்கள் 8, 30, 31 மற்றும் 179/1 ஆகியவை சந்திக்கும் இடத்தைச் சென்றடைகிறது.

**கிழக்கு.–** பின்னர் இவ்வெல்லையானது எண்.2, தேவாரம் கிராம நில அளவை எண்கள் 31, 175 மற்றும் 176 ஆகியவற்றின் மேற்கு எல்லை வழியே தெற்கு நோக்கி சென்று எண்.2, தேவாரம் கிராம நில அளவை எண்கள்.176, 178 மற்றும் 179/1 ஆகிய நில அளவை எண்கள் சந்திக்கும் முச்சந்தியை அடைகிறது.

<u>தெற்கு.–</u> பின்னர் இவ்வெல்லையானது எண்.2, தேவாரம் கிராம நில அளவை எண்கள் 178 மற்றும் 187 ஆகியவற்றின் வடமேற்கு மற்றும் வடக்கு எல்லை வழியே மேற்கு மற்றும் தென்மேற்கு நோக்கி சென்று எண்.2, தேவாரம் கிராம நில அளவை எண்கள் 187, 182 மற்றும் 179/1 ஆகிய நில அளவை எண்கள் சந்திக்கும் முச்சந்தியை அடைகிறது.

<u>மேற்கு.–</u> பின்னர் இவ்வெல்லையானது பொதுவாக எண்.2, தேவாரம் கிராம நில அளவை எண்கள் 182 மற்றும் 181 ஆகியவற்றின் கிழக்கு எல்லை வழியாகவும் நில அளவை எண் 180–ன் தெற்கு மற்றும் கிழக்கு எல்லைகள் வழியாகவும் வடக்கு நோக்கிச் சென்று, நில அளவை எண்கள் 180, 7 மற்றும் 179/1 ஆகியவை சந்திக்கும் தொடக்க இடத்தை சென்று அடைகிறது.

<u>அனுதிக்கப்பட்ட உரிமைகள்</u>

**வண்டிப்பாதை எண் -1 – தீபம் ஏற்றும் கல்பீடம் அமைந்துள்ள மேடைவரை செல்லும் சாலை**

இவ்வனவட்டாரத்தை கடந்து செல்லும், 495.6 மீட்டர் நீளமும் 3 மீட்டர் அகலமும் கொண்ட வண்டிப்பாதையானது இவ்வட்டாரத்தின் நில அளவை எண் 187–ன் தென்கிழக்கு வெட்டு முனையில் 11.8 மீட்டர் தூரத்தில் தொடங்குகிறது. மேற்படி சாலை அமைவிடங்களின் தொலைவு மற்றும் புவியிட அளவுகளின் விபரம் பின்வருமாறு:–

| இருப்பிடம் (தொடக்கம் – முடிவு) | நீளம் (மீட்டரில்) | புவியிட அளவுகள் | | இருப்பிடம் (தொடக்கம் – முடிவு) | நீளம் (மீட்டரில்) | புவியிட அளவுகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| 1–2 | 66.20 | N | 09.92291° | 11–12 | 6.40 | N | 09.92385° |
| | | E | 077.26843° | | | E | 077.26806° |
| 2–3 | 26.00 | N | 09.92311° | 12–13 | 15.00 | N | 09.92400° |
| | | E | 077.26848° | | | E | 077.26810° |

| இருப்பிடம் (தொடக்கம் – முடிவு) | நீளம் (மீட்டரில்) | புவியிட அளவுகள் | | இருப்பிடம் (தொடக்கம் – முடிவு) | நீளம் (மீட்டரில்) | புவியிட அளவுகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| 3–4 | 17.20 | N | 09.92319° | 13–14 | 59.60 | N | 09.92431° |
| | | E | 077.26803° | | | E | 007.26851° |
| 4–5 | 18.60 | N | 09.92334° | 14–15 | 45.00 | N | 09.92458° |
| | | E | 077.26830° | | | E | 077.26878° |
| 5–6 | 16.60 | N | 09.92341° | 15–16 | 30.00 | N | 09.92480° |
| | | E | 077.26826° | | | E | 077.26881° |
| 6–7 | 10.0 | N | 09.92348° | 16–17 | 15.00 | N | 09.92494° |
| | | E | 077.26820° | | | E | 077.26875° |
| 7–8 | 14.00 | N | 09.92358° | 17–18 | 60.00 | N | 09.92543° |
| | | E | 077.26815° | | | E | 077.26874° |
| 8–9 | 11.00 | N | 09.92367° | 18–19 | 23.00 | N | 09.92560° |
| | | E | 077.26816° | | | E | 077.26864° |
| 9–10 | 3.80 | N | 09.92368° | 19–20 | 18.00 | N | 09.92854° |
| | | E | 077.26813° | | | E | 077.26854° |
| 10–11 | 14.00 | N | 09.92380° | 20–21 | 26.20 | N | 09.92577° |
| | | E | 077.26809° | | | E | 077.26852° |
| | | | | மொத்தம் | 495.60 | | |

**வண்டிப்பாதை எண்–2 – பொன்குன்றம் முருகன் திருக்கோவில் வரை செல்லும் பாதை:–**

திட்டமிடப்பட்டுள்ள இவ்வனவட்டாரத்தின் வடமேற்கு மூலையில் தொடங்கும் 355.8 மீட்டர் நீளம் மற்றும் 3 மீட்டர் அகலம் கொண்ட இவ்வண்டிப்பாதையானது, நில அளவை எண் 31–ன் வடகிழக்கு வெட்டு முனையில் 4.0 மீட்டர் தூரத்தில்

தொடங்கி வனவட்டாரம் வழியாக செல்கிறது. மேற்படி அமைவிடங்களின் தொலைவு மற்றும் புவியிட அளவுகளின் விபரம் பின்வருமாறு.

| இருப்பிடம் (தொடக்கம் – முடிவு) | நீளம் (மீட்டரில்) | புவியிட அளவுகள் | | இருப்பிடம் (தொடக்கம் – முடிவு) | நீளம் (மீட்டரில்) | புவியிட அளவுகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| 1–2 | 14.00 | N | 09.92672° | 8–9 | 22.60 | N | 09.92677° |
| | | E | 077.27095° | | | E | 077.26976° |
| 2–3 | 15.00 | N | 09.92673° | 9–10 | 33.80 | N | 09.92703° |
| | | E | 077.27063° | | | E | 077.26949° |
| 3–4 | 41.00 | N | 09.92657° | 10–11 | 41.60 | N | 09.92672° |
| | | E | 007.27038° | | | E | 077.26932° |
| 4–5 | 7.00 | N | 09.92650° | 11–12 | 16.40 | N | 09.92658° |
| | | E | 007.27036° | | | E | 077.26933° |
| 5–6 | 14.80 | N | 09.92643° | 12–13 | 12.80 | N | 09.92646° |
| | | E | 077.27027° | | | E | 077.26949° |
| 6–7 | 55.80 | N | 09.92687° | 13–14 | 28.80 | N | 09.92624° |
| | | E | 077.27005° | | | E | 077.26949° |
| 7–8 | 39.00 | N | 09.92696° | 14–15 | 14.00 | N | 09.92603° |
| | | E | 077.26981° | | | E | 077.26945° |
| | | | | மொத்தம் | 355.80 | | |

<u>உள்ளடங்கிய பகுதிகள்:–</u>

1. இவ்வன வட்டாரத்திலிருந்து விலக்களிக்கப்பட்ட எண்.2, தேவாரம் கிராமம் நில அளவை எண் 179/2–ல் அமைந்துள்ள தீபம் ஏற்றும் கல்பீடம் அமைந்துள்ள உள்ள 0.03 எக்டேர் நிலம் இவ்வன வட்டாரத்தில் உள்ளடங்கிய பகுதியாக அனுமதிக்கப்படுவதுடன் காப்புக்காடு அறிவிக்கையிலிருந்து இப்பகுதிக்கு விலக்களிக்களிக்கப்படுகிறது.

2. இவ்வன வட்டாரத்திலிருந்து விலக்களிக்கப்பட்ட எண்.2, தேவாரம் கிராமம் நில அளவை எண்.179/3–ல் அமைந்துள்ள பொன்குன்றம் முருகன் திருக்கோவில் அமைந்துள்ள 0.06 எக்டர் நிலம் இவ்வன வட்டாரத்தில் உள்ளடக்கமாக அனுமதிக்கப்படுவதுடன், காப்புக்காடு அறிவிக்கையிலிருந்து இப்பகுதிக்கு விலக்களிக்களிக்கப்படுகிறது.

சுப்ரியா ஸாஹூ
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பி.எஸ்.சிவன்னா
பிரிவு அலுவலர்